பக்கங்கள் 21+6

# மாலை முரசு


கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 14 வியாழக்கிழமை 27.06.2024 அதிர்வு 332

## வவுனியா வைத்தியசாலையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞர்

(கே.வசந்தன்)

வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையின் நோயாளர் விடுதியில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் இன்று மீட்கப் பட்டுள்ளது என்று பொலிஸார் 04





# கண்துடைப்பு நாடகமே ரணிலால் அரங்கேற்றம்

## அவரின் உரைக்கு ஒஸ்கார் விருதை விட மேலான விருது வழங்கப்பட வேண்டும் என்று சஜித் கிண்டல்

"நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் உண்மை நிலையை மக்களுக்குச் சொல்ல வேண்டும். அதை விடுத்து பொய்களைக் கொட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரைக்கு ஒஸ் கார் விருதை விட மேலான விருதுகள் வழங்கப்பட வேண்டும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்க ளுக்கு நேற்று இரவு ஆற்றிய உரை தொடர்பில் கருத் துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். 04

# நுவரெலியா பொது மலசலக்கூடத்திலிருந்து இரு நாட்களில் 2 ஆண்களின் சடலங்கள் மீட்பு





(ஆ.ரமேஸ்)

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பி டத்தில் உள்ள பொது மலசலகூடத்தில் இருந்து ஆண்கள் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை இரவு ருவன் எலியாவைச் சேர்ந்த மொஹமட் இம்தி யாஸ் பாசில் (வயது 72) என்ற வயோதி பரின் சடலமும், இன்று காலை பொக வந்தலாவையைச் சேர்ந்த கல்பொகே ஹேவாகே அஜித் நிஸ்ஸங்க (வயது 51) என்ற குடும்பஸ்தரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இருவரும் மலசலகூடத்தில் வீழ்ந்து கிடந்ததை அவதானித்த பொது மக்கள், 1990 அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அறிவித்ததையடுத்து 04

# அரசின் அடக்குமுறையைக் கண்டித்து அதிபர், ஆசிரியர்கள் இன்று போராட்டம்



(பி.கேதீஸ்)

அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்து அதிபர், ஆசிரியர்கள் தலவாக்கலையில் இன்று போராட்டம் நடத்தினர்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை அரசு உடனடியாகத் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கொழும்பில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தின. இதன்போது அதிபர், ஆசிரியர்கள் மீது பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கண்ணீர்ப் புகை வீச்சு, நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் அடிதடி நடத்தினர். இதனை வன்மையாகக் கண்டித்தும், அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தலவாக்கலை பொது பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக அதிபர், ஆசிரியர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பாலசேகரம் உட்பட அதிபர், ஆசிரியர்கள் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதிபர், ஆசிரியர்கள் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

"கல்விச் சமூகத்தின் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்காதே, எமது உரிமையைக் கேட்பது அரசிடமா? ஐ.எம்.எப்பிடமா?, அதிபர், ஆசிரியர்கள் மீது வன்முறையைப் பிரயோகிக்காதே, அதிபர்,ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.








# வவுனியா பல்கலை கல்விசாரா ஊழியர் கவனவீர்ப்பு ஊர்வலம்

(கே.வசந்தன்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் இன்று கவன வீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை பூராகவும் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் 57ஆவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதோடு சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நேற்று கொழும் பில் நடைபெற்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்தின்போது அவர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டித்தும், தமது நியாயமான கோரிக்கையாகக் காணப்படுகின்ற சம்பள உயர்வை உடனடியாகத் தர வேண்டும் எனக் கோரியும் இந்த ஊர்வலத்தை அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள்பீட கட்டடத் தொகுதியிலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் நகர் வழியாக பழைய பஸ் நிலையத்தைச் சென்றடைந்து நிறைவடைந்திருந்தது.
















# யாழில் எரிந்த நிலையில் மோட்டார் சைக்கிள் மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், உடுவில் தெற்கு பிள்ளையார் கோயில் அருகே உள்ள காணியில் மோட்டார் சைக்கிள் ஒன்று எரிந்த நிலையில் இன்று காலை மீட்கப் பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிள் நேற்று இரவு எரியூட்டப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளின் உரிமை யாளர் அடையாளம் காணப்படாத நிலையில், காணி உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த சுன்னா கம் பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**நுவரெலியா பொது...**

சம்பவ இடத்துக்கு வந்தவர்கள் மேற்படி இருவரும் உயிரிழந்துள்ளமையை உறு திப்படுத்தினர்.

இரண்டு சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**வவுனியா வைத்தியசாலையில்...**

தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக நுழைவாயில் காப்பாளராகக் கடமை யாற்றிய மேற்படி இளைஞர் மன அழுத் தம் காரணமாக வைத்தியசாலையின் 12ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந் தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று காலை நோயாளர் விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

நொச்சிமோட்டைப் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய ஜீவராஜா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்த மரணம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

**கண்துடைப்பு...**

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

“இன்றும் நாட்டு மக்கள் ஏமாற்றப் பட்டு, ஒட்டுமொத்த நாடும் பொய்களால் வஞ்சிக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியால் கண்துடைப்பு நாட கமே அரங்கேற்றப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அவரின் விசேட உரைக்கு ஒஸ்கார் விருதை விட மேலான விருதுகள் வழங்கப்பட வேண்டும்.

365 நாட்களும் 24 மணி நேர மும் பொய் சொல்வதையே வழக்க மாகவும், தொழிலாகவும் கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றார் ஜனாதி பதி.

இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி, இருக்கும் ஒன்றை இல்லை யென்று சொல்லி, பொய்யை உண் மையாக்கி, உண்மையைப் பொய் யாக்கும் செயற்பாடு முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. இவ்வாறான மாயை யான பயணத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

நாட்டை கட்டியெழுப்ப வேண்டு மானால், நாட்டின் உண்மை நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உண் மையை இந்த நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும். எமது நாடு 92 பில்லியன் அமெரிக்க டொலர்களுக் கும் அதிகமான கடனில் சிக்கித் தவிக் கின்றது.

இந்தக் கடன் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு கடன்களைக் கொண்டுள் ளது. இந்தக் கடன் தொடர்பில் அறியும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது.” - என்றார்.



# மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 8 சிறுவர்கள் மீட்பு!

## படகு உரிமையாளர்களுக்கு அபராதம் விதிப்பு

## மானிய டீசல், மீன்பிடி அனுமதிச் சீட்டு இரத்து

(எஸ்.ஆ ர்.லெம்பேட்)

இந்தியாவின் தமிழகம் – இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் செல்லும் விசைப்படகில் 18 வயதுக்குக் கீழ் உள்ள 8 சிறுவர்கள் தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு படகு உரிமையாளர்களுக்குத் தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் அரசு வழங்கும் மானிய டீசல் மற்றும் மீன்பிடி அனுமதிச்சீட்டை இரத்துச் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் 800 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடும் வழக்கில் இலங்கைக் கடற்படையால் சிறைப் பிடிக்கப்படும் இராமேஸ்வரம் விசைப்படகுகளில் சிறுவர்களும் கைது செய்யப்படுகின்றனர் என்று குற்றச்சாட்டுகள் எழுந்து வருவதன் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு சந்திரன் உத்தரவின் பேரில் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் செல்லும் மீன்பிடிப் படகுகளில் சிறுவர்கள் மீன்பிடித் தொழிலில் பயன்படுத்தப்படுகின்றார்களா என்பது குறித்து மாவட்ட குழந்தைகள் நல அலுவலர், தொழிலாளர் நல வாரியம் மற்றும் மீன் வளத்துத்துறை அதிகாரிகள் கூட்டாகத் திடீர் சோதனை நடத்தினர்.

அப்போது நேற்று இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்று இன்று காலை கரை திரும்பிய 8 மீன்பிடிப் படகுகளில் 8 சிறுவர்கள் மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டமை தெரியவந்தது.

இதையடுத்து அந்த 8 சிறுவர்களையும் மீட்ட தொழிலாளர் அமலாக்கப் பிரிவு உதவி ஆணையர் மலர்விழி தலைமையில் அதிகாரிகள், சிறுவர்களை மீன்பிடித் தொழிலுக்கு வரக்கூடாது என்றும், பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியதுடன் சிறுவர்களை மீன்பிடித் தொழிலில் பயன்படுத்திய விசைப்படகின் உரிமையாளர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தனர்.

மேலும் சிறுவர்களை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தியதற்காகத் தமிழக அரசால் வழங்கப்படும் மீன்பிடி அனுமதிச்சீட்டு மற்றும் மானிய டீசல் என்பன இந்த வழக்கு முடியும் வரை இரத்துச் செய்யப்படுகின்றன என்றும் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அப்துல் காதர் ஜெயராணி உத்தரவிட்டுள்ளார்.





## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# விநோதமான நாடு

இலங்கையைப் போல விநோதமான - விபரீதமான - வித்தியாசமான - நாடு இருக்க முடியாது எனலாம்.

செத்த வீட்டிலும் கொண்டாட்டம் நடத்தும் மிக அதிசயமான மக்கள் கூட்டம் இது போலும்.

கடந்த நான்கு, ஐந்து தசாப்தங்களாக ஆட்சி நடத்திய அரசியல்வாதிகள் நாட்டின் பொருளாதார நிலைமை குறித்துச் சிந்திக்காமல், கடன் வாங்கிக் குவித்து, ஊழல் - முறைகேடுகள் - மோசடிகள் - லஞ்ச லாவண்யங்களில் - ஈடுபட்டு நாட்டைச் சூறையாடி, சுருட்டிக் குட்டிச்சுவராக்கி விட்டனர்.

அதனால் அதலபாதாளத்தில் விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதார நிலைமையைத் தூக்கி நிறுத்துவதை விடுத்து, அதையொட்டி சின்னத்தனமான அரசியல் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் நம் அரசியல் தலைவர்கள்.

வாங்கிய கடனை மீளச் செலுத்த முடியாமல் கைவிரித்து, நடுவீதியில் நின்றது நாடு. இப்போது அறவிட வேண்டிய கடனை மீளப் பெறுவதில் சற்றுக் கருணை காட்டி இருக்கின்றன கடன் வழங்கிய நாடுகள். காலில் விழாத குறையாகக் கெஞ்சிக் கூத்தாடி, கால அவகாசத்தை நாடு பெற்றிருக்கின்றது. இப்படி கெஞ்சிக் கூத்தாடி அவகாசம் பெற்றமையையே ஒரு சாதனையாக வெடி கொளுத்திக் கொண்டாடுகிறது ஒரு கூட்டம்.

மற்றொரு கூட்டமோ கடன் கொடுத்த நாடுகளும், சர்வதேச நாணய நிதியமும் விதித்த நிபந்தனைகளுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் கண்ணை மூடிக்கொண்டு இயைந்து, இணங்கி விட்டனர் என்று குறை கூறுகின்றது.

சர்வதேச கடன் மீள்செலுத்துகை கடப்பாட்டில் இன்று இலங்கை நிபந்தனை விதிக்கும் அல்லது தீர்மானத்தைத் தனித்து முடிவெடுக்கும் மேலாதிக்க நிலையில் இல்லை. ஒருவகையில் பார்த்தால் இந்தப் பிரச்சினையில் - இன்றைய நிலையில் - இலங்கைத் தரப்பு யாசிக்கும் (வேறு வார்த்தைகளில் கூறுவதானால் பிச்சையெடுக்கும்) கட்டத்தில்தான் - கட்டாயத்தில்தான் - இருக்கின்றது. யாசகனுக்கு யாசகமாக பெறும் விடயம் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் ஏதும் இல்லை அல்லவா?

இதைப் புரியாமல், கடன் மறு சீரமைப்புக்கான இணக்கத்தை ஒரு சாரார் சாதனையாகக் காட்டித் துள்ளிக் குதிப்பதும், மறுசாரார் வேதனையாகச் சுட்டிக் குறை கூறுவதும் விநோதமான விடயங்கள்தாம்.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கும் முயற்சித் திட்டத்தில் கடன் வழங்கிய நாடுகளுடன் கடன் மீளளிப்புக்கான மறுசீரமைப்பு ஏற்பாடுகளுக்கு இலங்கை இணக்கம் கண்ட நேற்றைய தினம் இவ்விவகாரத்தில் ஒரு திருப்புமுனை நாள்தான்.

ஆனால் ஒரு தரப்பு அதனைப் பெரும் சாதனையாகவோ, மறுதரப்பு அதனைப் பெரும் வேதனையாகவோ காட்ட முயல்வது அர்த்தமற்றது. அபத்தமானது. சின்னத்தனமான அரசியல்.

இந்தக் கட்டத்திலிருந்து நாட்டை முன்னோக்கி நகர்த்துவது எங்ஙனம் என்பதில்தான் இந்த எதிரும் புதிருமான தரப்புகள் கரிசனை காட்ட வேண்டும்.

அந்த எண்ணவோட்டத்தில் இந்த இரண்டு தரப்புகளுமே இருக்கின்ற மாதிரித் தென்படவே இல்லை.

பொருளாதாரத்தில் இத்தகைய சீர்கேட்டு நிலைக்குச் சென்றமைக்கு ஊழல், மோசடி, லஞ்சம், திறமையற்ற நிர்வாகம், நிதித் துஷ்பிரயோகம், நிதித் திட்டங்களில் பொறுப்பு கூறல் கடப்பாடின்மை என்று பல பிரதான காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை பற்றி எல்லாம் யாரும் அதிகம் அலட்டிக்கொள்பவர்களாக தெரியவில்லை. அதுவும் விநோதமான நிலைப்பாடுதான்.

நாட்டின் பொருளாதார மீட்சி குறித்து அதிக உபதேசங்கள் - பிரசங்கங்களை - போகின்ற இடமெல்லாம் கதாகாலாட்சேபமாக முழங்கித் தள்ளிக் கொண்டிருக்கின்றார் நாட்டின் அதிஉத்தமர்.

ஆனால் இந்தக் கொடுஞ்செயல்களில் எல்லாம் ஈடுபட்டு, நாட்டின் நிதி வளத்தைச் சூறையாடியவர்கள் எல்லோருமே அவருக்குப் பக்கத்தில் - அவரின் அரசின் பாதுகாப்பில்தான் - தொடர்ந்து தங்கள் சூறையாடலை முன்னெடுத்தபடி இருக்கின்றார்கள் என்ற உண்மையை அவர் கண்டும் காணாதவரமாக இருந்து உபதேசங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார். இதுவும் நாட்டின் பெரும் துரதிஷ்டம் மட்டுமன்றி விநோதமான நிலைதான்.

நாட்டின் பொருளாதாரப் பின்னடைவை 'குரங்கின் கைப் புண்ணாக வைத்து நோண்டிக் கொண்டிருக்கும்' நமது அரசியல்வாதிகளால் அதனைச் சீரமைக்க முடியாது, சீர் கெடுக்கத்தான் போகிறார்கள்.



# வலய மட்ட சதுரங்கப் போட்டியில் கற்பிட்டி மாணவர் மாகாணத்துக்கு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கம் கல்வி அமைச்சுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு இடையிலான புத்தளம் வலய சதுரங்கப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 8 மாணவர்கள் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.புத்தளம் வலய பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டி புத்தளம் ஆனந்தா தேசிய கல்லூரியில் இடம் பெற்றது.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 13 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆத்திப் 15 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் எம்.எஸ். எப். சபீஹா 2ஆம் இடத்தையும் 15 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆதில் ஹசன் ஐந்தாம் இடத்தையும் மற்றும் எம்.எம். மயிஸ் அஹமட் ஏழாம் இடத்தையும் 17 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் எம். ஆர். ஆயிஷா மூன்றாம் இடத்தையும் 17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆஷிப் 2 ஆம் இடத்தையும், எஸ்.டி. இத்தர்ஷனன் 3 ஆம் இடத்தையும், எம்.எஸ்.எம். சியாப் நான்காம் இடத்தையும் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இந்த மாணவர்களின் வெற்றிக்காகப் பாடுபட்ட ஆசியர்களான அன்பஸ், பைசல், றியாஜ் ஆசிரியைகளான சகீலா, ஹிசானா, அஸ்ரிபா, அமிறுன்நிசா ஆகியோருக்குப் பாடசாலைச் சமூகம் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.







# கொட்டகலை சூழலியல் ஈர நிலப் பகுதிகளில் ஆக்கிரமிப்புச் செடிகள் பரவும் அபாய நிலை

(மஸ்கெலியா )

நுவரெலியா மாவட்டத்தின் மிகப் பெரிய ஈரநிலப் பிரதேசமான கொட்டகலை சூழலியல் ஈர நிலப் பகுதியில் ஆக்கிரமிப்புச் செடிகள் பரவலாகப் பரவும் அபாயம் காணப்படுகிறது என்று மலையக சுற்றாடல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நாட்டின் சதுப்பு நிலங்களைச் சுற்றி பரவி வரும் ராட்சத தொட்டா சினுங்கி உள்ளிட்ட அனைத்து ஆக்கிரமிப்புச் செடிகளும் கொட்டகலை ஈரநிலப் பகுதியில் வேகமாகப் பரவி வருகின்றன. தற்போது ஈரநிலத்தில் நடைபாதைகளிலும் பரவிவிட்டன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

சதுப்பு நிலப் பிரதேசத்தின் இயற்கை அழகை கேடு விளைவிக்கும் இந்த ஆக்கிரமிப்புச் செடிகளை அகற்றுவதற்குப் பொறுப்பான திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மலையக சுற்றாடல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

சதுப்பு நிலம் மிகவும் மதிப்புமிக்க நீர் ஆதாரம் என்றும், ஈரநிலத்தைத் தவிர வேறு எந்த இடத்திலிருந்தும் முதன்மையான பொருள்களைப் பெறுவதில்லை என்பதால், அழகும் பெரும் மதிப்பும் நிறைந்த அத்தகைய ஈரநிலங்களைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமான பணியாகும்.

இந்த நிலையில் தற்போது ஈரநிலப் பிரதேசம் அழிவின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்று மலையக சுற்றாடல் ஆர்வலர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.





# பறகஹதெனிய தேசிய பாடசாலைக்கு திறன் வகுப்பறைகள் கையளிப்பு

(அஹ்சன் அப்தர்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பாடசாலைகளுக்குத் திறன் வகுப்பறைகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக பறகஹதெனிய தேசிய பாடசாலைக்குத் திறன் வகுப்பறைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வின் போது க.பொ.த. உயர்தரத்தில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது பாடசாலைக்கான கேட்போர் கூடம் தொடர்பிலான வேண்டுகோள் அதிபர் மற்றும் பாடசாலை மாணவர்கள் சார்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் முன்வைக்கப்பட்டு, அது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சாதகமான பதிலைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ அலவதுவல, அஷோக அபேசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் பறகஹதெனிய தொகுதி ஒருங்கிணைப்பாளர் முஆத் ஃபாரூக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







# 40 வருடங்கள் பொலிஸ் சேவையாற்றி ஓய்வுபெறும் பிரதி பொலிஸ் மாஅதிபர்!

(ஆ.ரமேஸ்)

பொலிஸ் திணைக்களத்தில் சுமார் 40 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெறும் பிரதி பொலிஸ் மாஅதிபர் லயனல் குணதிலக்கவின் பிரியாவிடை நிகழ்வு நுவரெலியா நகர மண்டபத்தில் (25) நடைபெற்றது.

நுவரெலியா பொலிஸ் தலைமையகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில்,ஓய்வு பெற்று செல்லும் நுவரெலியா மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் லயனல் குணதிலக்கவை கௌரவித்து மரியாதை அணிவகுப்பை நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மான தலைமை தாங்கி நடத்தினார்.

தனது 40 வருடகால பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் பிரதி பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலக்க கண்டி சில்வெஸ்டர் பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர் 1985 இல் உப பொலிஸாராக கடமையாற்றினார்.

பின் பொலிஸ் பரிசோதகராக பொலிஸ் சேவையில் இணைந்து இவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையில் வடக்கு, கிழக்கு உட்பட தீவின் பல பிரதேசங்களில் பல பதவிகளில் கடமையாற்றி பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியாகவும் கடமையாற்றினார்.

லயனல் குணதிலக்க பொலிஸ் சேவையில் கடமையாற்றிய காலப் பகுதியில் மேற்கொண்ட தனது பல செயற்பாட்டு கடமைகளின் காரணமாக பல பதக்கங்களை பெற்றுள்ளதுடன், தனது பொலிஸ் சேவையில் சிறந்த பொலிஸ் உத்தியோகத்தராக தனது சேவையை ஆற்றியுள்ளார்.







# நுரைச்சோலை தேசிய பாடசாலையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

கற்றல் உபகரண தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (24) நுரைச்சோலை தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமமின் எண்ணத்தில் உதயமான "அறிவால் உலகை ஆள்வோம் அறிவார்ந்த சமூகமே எமது இலக்கு" என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்ட புத்தளம் பீ.சீ.எம்.எச். நிதியத்தின் பங்களிப்புடன் இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதேவேளை, பாடசாலையின் ஆரம் பப் பிரிவின் உள்ளக வீதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும், 05 லட்சம் ரூபா பெறுமதியான வாத்தியக்கருவிகள் அன்பளிப்பு செய்யும் நிகழ்வும் சமகாலத்தில் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இம்ரான்கான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து கொண்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் சேவைகளை பாராட்டி அவருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.





# இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய மன்ற கலந்துரையாடல்

**(பழுவூரான்)**

இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய மன்ற கலந்துரையாடல் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையில் பாசிக்குடாவில் திங்கட்கிழமை (24) இடம்பெற்றது.

இலங்கை மத்திய வங்கியால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் பொருளாதார முன்னெடுப்புக்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

பணவீக்கம் மற்றும் பொருளாதார மந்தநிலையில் தேசிய பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட உபாயங்கள் தொடர்பாக இதன்போது தெளிவூட்டப்பட்டது.



இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, சர்வதேச ரீதியாகப் பொருளாதாரத்தில் பாதிக்கபட்ட பல நாடுகளில், எமது நாட்டை மிக விரைவில் பொருளாதார தளம்பல் மற்றும் பணவீக்கத்தில் இருந்து புதிய உபாயங்களையும் வட்டி வீதங்களில் மாற்றங்களையும் ஏற்படுத்தி சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்டமைக்கு வங்கிகளின் பங்குகள் அளப்பெரியது என்றார். அபிவிருத்திகளின் பங்காளர்களாக வங்கிகள் காணப்படுவதை இதன்போது ஆளுநர் சுட்டிக்காட்டினர்.

இந்த நிகழ்வில் துறைசார் நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளையும் உள்வாங்கியதுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், மத்திய வங்கியின் உதவி ஆளுநர் டபிள்யூ தில்ருக்சி, அரச உயர் அதிகாரிகள், பொருளாதார நிபுணர்கள், வங்கி முகாமையாளர்கள், தொழில்சார் நிபுணர்கள், தொழில் முயற்சியாளர்கள், மற்றும் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை வழங்கிய நலன்புரி அமைப்புகள் பாராட்டிக் கௌரவிப்பு

(சியாத்.எம்.இஸ்மாயில்)

நிந்தவூர் ரோஸ் றீனா நிறுவனத்தின் சமூக சேவைப் பிரிவின் ஏற்பாட்டில் சமூக நலன்புரி அமைப்புக்களின் ஊடாக அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை சமூகத்துக்காக முன்னெடுத்த நலன்புரி அமைப்புக்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நிந்தவூர் அழகாபுரி தனியார் விடுதியில் இடம்பெற்றது.

ரோஸ் றீனா சமூக சேவைகள் அமைப்பின் ஸ்தாபகரும், முகாமைத்துவப் பணிப்பாளரும், சமூக ஆர்வலருமான ஏ.ஜே.ஜனுபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சின் செயலாளரும், தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினரும், சம்மாந்துறை மஜ்லிஸ் சூரா அமைப்பின் தலைவருமான எம்.ஐ.அமீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிந்தவூர் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர்களான ஏ.எம்.அப்துல் லத்திப், எம்.எம்.ஆசிக் மற்றும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றின் வைத்திய அத்தியட்சகர்களான டாக்டர் ஏ.எல்.எப்.ரஹ்மான், டாக்டர் எம்.பீ.ஏ.அப்துல் வாஜித், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம்.ரயிஸ், கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளரும் நிந்தவூர் ஜும்மா பள்ளிவாசல் தலைவருமான எம்.ஏ.எம்.றநீன் ஆகியோர் இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இவ்வமைப்பால் முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் அர்ப்பணிப்பு மிக்க சமூக சேவைகளை முன்னெடுத்த நலன்புரி அமைப்புக்கள், சமூக சேவையாளர்கள் பாராட்டி நினைவு சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

எதிர்காலத்தில் மேலும் பல சமூக சேவை அமைப்புக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் இந்த அமைப்பால் பாராட்டி கௌரவிக்கப்பட உள்ளதோடு, சமூகப் பரப்பில் காணப்படும் சமூக விரோத செயற்பாடுகளைக் களைவதற்கும் சிறுவர்கள், இளைஞர்கள் செல்லும் பாதையை ஒழுங்கமைப்பதற்குமான பணியிலே ரோஸ் றீனா சமூக சேவை பிரிவு போன்று அனைத்து சமூக சேவை அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான அழைப்பை ரோஸ் றீனா சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகர் சமூக ஆர்வலர் ஏ.ஜே.ஜனுபர் விடுத்துள்ளார்.






# உயர்தர முதல்நிலை மாணவன் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் முதல் நிலை பெற்று மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவன் பிர்தௌஸ் இஹ்சான் அஹமட், இலங்கை ஜமாஅதே இஸ்லாமி கல்முனை மன்றம் மற்றும் மஸ்ஜிதுல் ஹைறாத் பள்ளிவாசல் ஆகிய நிறுவனங்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.





# ஆலையடிவேம்பு கோட்ட தமிழ்த்தின விழா!

(வி.ரி.சகாதேவராஜா)

ஆலையடிவேம்பு கோட்ட தமிழ் மொழி தின போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் திங்கட்கிழமை அக்கரைப் பற்று ஸ்ரீஇராமகிருஷ்ணா கல்லூரியில் நடைபெற்றன.

முன்னதாக வாசலில் இருந்து அதிதிகள் மலர்மாலை அணிவித்து கலாசார நிகழ்வுகளுடன் வரவேற்கப்பட்டனர்.

முதலாம் கட்ட நிகழ்வானது ஆலையடிவேம்பு கோட்டக் கல்விப்பணிப்பாளர் க.கமலமோகனதாசன் தலைமையில் 16 பாடசாலை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்புடன் கோலாகலமாக ஆரா தனை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர்கள், ஆலையடிவேம்பு கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், திருக்கோவில் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.









# மட்டு. ஜெயந்திபுரம் கிராம அபிவிருத்தி சங்கக் காணிக்கு மதில் அமைக்க நிதி

## சாணக்கியன் எம்.பி. ஒதுக்கினார்

(பழுவூரான்)

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு உரிய காணிக்கு மதில் அமைப்பதற்கு மட்டக்களப்பு மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை (23) இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது அடிக் கல்லை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் இரா. சாணக்கியன் நட்டு வைத் தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் மதிமேனன், ஒருங்கிணைப்புச் செயலாளர் தினேஷ் குமார், ஆறாம் வட்டாரத் தலைவர் பிரதீப், ஜெயந்திபுர கிராம உத்தியோகத் தர், பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர் , சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச பொலீஸ் உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# திருமலையில் மு.தயாளனின் 'கரும்பலகை' நாவல் வெளியீடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கரவை மு.தயாளன் எழுதிய கரும்பலகை நாவல் வெளியீட்டு விழா எண்ணம்போல் வாழ்கை இயக்குநர் கனக. தீபகாந்தன் தலைமையில் திருகோணமலை நகர சபைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு வவுனியா தேசிய கல்வியல் கல்லூரியின் மேனாள் உப பீடாதிபதியான ந.பார்த்தீபன் பிரதம விருந்தினராகவும், திருகோணமலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. சண்முகநாயகம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.









# பல்கலைக்கும் தெரிவான மாணவர்களால் கற்பித்த ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றி 2022 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில், அதிபர் மற்றும் ஆசிரியர்களைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

இந்த மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட "சாதனையாளர்களை கௌரவித்தல்" வரலாற்று முக்கியத்துவமிக்க விழா கல்லூரி அதிபர் அருட் சகோதரர் எஸ்.இ.றெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

பற்றிமா கல்லூரியின் பழைய மாணவியும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அத்துடன் கல்லூரியின் பழைய மாணவர்களான டாக்டர் மகாலிங்கம் லட்சியன், பொறியியலாளர் எம்.கிரிதரன், சட்டத்தரணி ரவீந்திரன் சுஜீதா ஆகியோர் நட்சத்திர அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

கல்லூரி பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கற்பித்த மற்றும் வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அதிதிகளால்பாராட்டிக்கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இந்த நிகழ்வின் போது அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 2022 ஆம் ஆண்டு அக்கல்லூரியில் இருந்து 68 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# மடு பிரதேச விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

( வாஸ் கூஞ்ஞ)

மடு பிரதேச செயலகத்தால் விரைவில் நடத்தப்படவுள்ள பிரதேச பண்பாட்டு விழாவில் கலைஞர்கள் மற்றும் இலக்கியவாதிகள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதன்பொருட்டு மடு பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று மடு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இலக்கியத்துறை மற்றும் வாத்தியக் கலை, கூத்து, கிராமியக் கலைகள், ஒப்பனைத்துறை கலைஞர்கள் குறித்த விருதுகளுக்காக தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

விருது வழங்கலுக்கான விண்ணப்ப படிவங்களை பிரதேச செயலகத்தில் கலாசாரப் பிரிவிலும் தத்தமது பகுதி கிராம சேவை உத்தியோகத்தர் களிடமிருந்தும் பெற்று எதிர்வரும் 08.07.2024 இற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கலைஞர் கௌரவிப்பு 40 வயதுக்குக் கீழ் மற்றும் 41 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என மூன்று வயதுப்பிரிவினரை உள்ளடக்கியதாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தினரால் உயர்தர மாணவர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர்தரத்தில் சிறப்பு சித்தியடைந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது.

ஆலையடிவேம்பு கல்வி கோட்டத்தில் இந்த முறை 70 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சித்தியடைந்த நிலையில் பாடசாலை ரீதியாக பாடத்துறையில் முதலிடங்களை பெற்ற 13 மாணவர்கள் மாத்திரம் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

ஆலயத்தின் தலைவர் வி.சுகிர்த குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக நீதிபதி த.கருணாகரன் கலந்து கொண்டார். அம்பாறை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சிரேஷ்ட திட்ட பொறியியலாளர் ந.லோகிஸ், அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலையின் கதிரியக்கவியல் நிபுணர் கோ.சாருலதன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் திருக்கோவில் கல்வி வலய ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் சுதாகரன், இந்துமாமன்ற தலைவர் தணிகாசலம், அதிபர்களான சண்டேஸ்வரன், தயாளுபன், நேசராஜா, கணக்காய்வாளர் கோபாலபிள்ளை ஆனியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.நிகழ்வில் ஆசியை ஆலய உற்சவ கால பிரதமகுரு சிவஸ்ரீ சுதர்சன் குருக்கள் மற்றும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கேதீஸ்வரக்குருக்கள் ஆகியோர் வழங்கினர்.









# வவுனியா - பண்டாரிகுளம் பிரதான வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைப்பு

(கே.வசந்தன்)

வவுனியா – பண்டாரிகுளம் பிரதான வீதி புனரமைப்பு பணிகள் நேற்று (26) உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நீண்ட காலமாக புனரமைக்கப்படாத இந்த வீதி ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ காலத்தில் புனரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு இடம்பெற்று இருந்த போதிலும், குறித்த பணிகள் ஆரம்பிக்கப்படாமல் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் வவுனியா அபிவிருத்தி குழு தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனின் நிதி ஒதுக்கீட்டில் 30.3 மில்லியன் ரூபா செலவில் இந்த வீதி காபர்ட் வீதியாக 1.9 கிலோ மீற்றர் தூரத்துக்குப் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.



தினமும் ஆயிரக் கணக்கானோர் பயன்படுத்தும் இந்த வீதி சொப்பனிடப்படாமை தொடர்பில் பொது மக்கள் விமர்சனம் செய்து வந்த நிலையிலேயே இந்தப் பணிகள் நாடாளுமன்ற உறுப்பினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



# உகந்தைக் காட்டுப் பாதை 30 இல் திறப்பு; பாதுகாப்பு அமைச்சருடனான சந்திப்பில் முடிவு

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனுக்கும் இடையிலான சந்தித்திப்பு நேற்று (26) இடம்பெற்றது.

கதிர்காம பாதையாத்திரையில் ஈடுபடும் பக்தர்களுக்காக உகந்தை தேசிய பூங்கா வாயில் கதவுகளை திறக்கும் திகதிகள் தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோனுடன் பாதுகாப்பு அமைச்சில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஜூன் மாதம் 30 ஆம் திகதி காலை 6 மணிக்கு கதவுகளைத் திறப்பதற்கு தயாராகுமாறு அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்ட செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிராக மத ரீதியான தாக்குதல்கள் அதிகரிக்கின்றன

## அமெரிக்க வெளியுறவுத்துறை அறிக்கை

வொஷிங்டன்,ஜூன்27

இந்தியாவில், மதமாற்ற தடுப்புச் சட்டங்கள், வெறுப்பு பேச்சு மற்றும் சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்படும் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன என அமெரிக்க வெளியுறவுத்துறைச் மந்திரி அண்டனி பிளிங்கன் கூறினார்.

2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மத சுதந்திரம் குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவில், கட்டாய மதமாற்றத் தடைச் சட்டங்கள், வெறுக்கத்தக்க பேச்சு, சிறுபான்மை மத சமூகங்களைச் சேர்ந்தவர்களின் வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்படும் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன. அதே நேரத்தில், உலகெங்கிலும் உள்ள மக்கள், மத சுதந்திரத்தை பாதுகாக்க தீவிரம் காட்டுகின்றனர்.

இந்தியாவில் 10 மாநிலங்களில் மதமாற்றங்களை கட்டுப்படுத்துவதற்கான தடைச்சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதில் சில மாநிலங்களில், திருமண நோக்கத்திற்காக கட்டாய மத மாற்றங்களுக்கு எதிராக அபராதங்களை விதிக்கப்படுகின்றன.

மத சிறுபான்மை குழுக்களின் சில உறுப்பினர்கள், வன்முறையில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும், மத சிறுபான்மை குழுக்களின் உறுப்பினர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கும், அவர்களின் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் அரசுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளனர்.



மத சமூகங்களுக்கு தனித்தனி தனிநபர் சட்டங்கள் அமைப்பதற்குப் பதிலாக, நாடு முழுவதும் ஒரே மாதிரியான சிவில் சட்டத்தை (யு.சி.சி.) அமல்படுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி வருகிறார். இந்த முயற்சியை முஸ்லிம், சீக்கியர், கிறிஸ்தவர், மற்றும் பழங்குடியின தலைவர்கள் மற்றும் சில மாநில அரசு அதிகாரிகள் எதிர்த்தனர். இது நாட்டை இந்து தேசமாக மாற்றும் திட்டத்தின் ஒரு பகுதி என்ற அடிப்படையில் அவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சியில் அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி அண்டனி பிளிங்கன் பேசுகையில் -

இந்தியாவில், மதமாற்றத் தடுப்புச் சட்டங்கள், வெறுப்பு பேச்சு மற்றும் சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்படும் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன எனக் கூறினார்.

இதேபோல் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையிலும் இந்தியாவுக்கு எதிரான கருத்தை அமெரிக்கா கூறியிருந்தது. அந்த அறிக்கையை இந்தியா உடனடியாக நிராகரித்தது. தவறான தகவல் மற்றும் தவறான புரிதலின் அடிப்படையில் அந்த அறிக்கை உள்ளதாக விமர்சனம் செய்தது. சில அமெரிக்க அதிகாரிகளின் அழுத்தம் மற்றும் பாரபட்சமான கருத்து, இந்த அறிக்கையின் நம்பகத் தன்மையை குறைக்கும் என்றும் கூறியது.

அமெரிக்காவுடனான நட்புறவை மதிக்கும் அதேசமயம், கவலையளிக்கும் விஷயங்களில் வெளிப்படையான பரிமாற்றங்களைத் தொடர உள்ளதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மக்களவை, மாநிலங்களவை இரண்டினதும் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி இன்று உரை

புதுடெல்லி,ஜூன்27

18 ஆவது மக்களவையின் முதல் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு இன்று பகல்உரையாற்றினார்.

முன்னதாக ஜனாதிபதி திரவுபதி முர்மு குதிரைப் படை புடைசூழ நாடாளுமன்றம் அழைத்து வரப்பட்டார். அவரை பிரதமர் மோடி, துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர், சபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோர் வரவேற்றனர்.

இந்த நிலையில் மக்களவை, மாநிலங்களவை கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி திரவுபதி முர்மு கூறியவை வருமாறு:-

60 ஆண்டுகளுக்குப் பிறகு மூன்றாவது முறையாக ஒரே அரசை மக்கள் தேர்வு செய்துள்ளனர். அரசின் வாக்குறுதிகளில் மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மக்களின் நம்பிக்கையை இந்த அவை நிறைவேற்றும். நிலையான அரசின் மூலமே மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும். இந்த நிதியாண்டுக்கான முதல் பட்ஜெட் விரைவில் தாக்கல் செய்யப்பட உள்ளது. பட்ஜெட்டில் பல முக்கிய திட்டங்கள் அறிவிக்கப்படும்.

மாநிலங்களின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்ற சிந்தனையின் அடிப்படையில் முன்னேற்ற பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். சீர்திருத்தம், செயல்திறன், மாற்றம் என்ற சிந்தனையுடன் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது.

உலக பொருளாதாரத்தில் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதாரம் என்ற நிலையை இந்திய அடைந்துள்ளது. கொரோனா பெருந்தொற்று, உலகளாவிய சிக்கல்களுக்கு



மத்தியிலும் நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது. உலக பொருளாதாரத்தில் இந்தியா மூன்றாவது இடத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. உற்பத்தி, சேவைகள், விவசாயம் ஆகிய மூன்றுக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

புதிய தொழில்நுட்பங்களில் நாடு முன்னேற்றம் அடைந்து வருகிறது. சிறிய நகரங்களுக்கும் விமான போக்குவரத்து வசதி கிடைத்துள்ளது. தற்சார்பு இந்தியாவுக்கான கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பல்வேறு பிரச்சினைகளுக்கு நம் நாடு தீர்வு காணும் என்று உலக அரங்கில் நம்பப்படுகிறது. - இவ்வாறு அவர் கூறினார்.

நிலையான அரசின் மூலமே மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும் என்றும் ஜனாதிபதி திரவுபதி முர்மு கூறியுள்ளார்.



# ரஷ்யாவில் பயணிகள் ரயில் தடம் புரண்டு பெரும் விபத்து

## எழுபதுக்கும் மேற்பட்ட பயணிகள் காயம்

மொஸ்கோ,ஜூன்27

ரஷ்யாவில் பயணிகள் ரயில் ஒன்றின் 9 பெட்டிகள் திடீரென தடம் புரண்டு விபத்திற்குள்ளானது. இந்த சம்பவத்தில் ரெயிலில் பயணித்த எழுபதுக்கும் மேற்பட்ட பயணிகள் சிக்கி காயமடைந்துள்ளனர். அவர்களில் 7 பேரின் நிலைமை கவலைக்குரிய வகையில் உள்ளது. எனினும், உயிரிழப்புகள் பற்றிய தகவல் எதுவும் வெளிவரவில்லை.

வடகிழக்கு பிரதேசமான கோமி பகுதியில் உள்ள வோர்குடா நகரில் இருந்து கருங்கடல் துறைமுக பகுதியான நோவோரோஸிஸ்க் நகர் வரையிலான 5 ஆயிரம் கி.மீ. தொலைவை இந்த ரயில் கடந்து செல்கிறது.

இதுபற்றி ரஷ்ய ரயில்வே வெளியிட்ட செய்தியில் -

கோமி ரிபப்ளிக் பகுதியில் இன்டா நகர் அருகே, 511 என்ற எண் கொண்ட பயணிகள் ரயில் உள்ளூர் நேரப்படி மாலை 6.12 மணியளவில் விபத்தில் சிக்கியது என தெரிவித்து உள்ளது.

அந்த ரயிலில் 14 பெட்டிகள் இருந்தன. மொத்தம் 232 பயணிகள் ரயிலில் பயணித்து உள்ளனர். கனமழை பெய்து வந்த நிலையில், அதனால் ரயில் தடம் புரண்டு இருக்க கூடும் என்றும் தெரிவித்துள்ளது.



# நேபாளத்தில் வெள்ளத்தால் 17 நாள்களில் 28 பேர் சாவு

காஸ்கி,ஜூன்27

நேபாளத்தில் பருவமழை காலம் தொடங்கியதில் இருந்து அந்நாட்டில் கடந்த 17 நாட்களில் மொத்தம் 28 பேர் உயிரிழந்து உள்ளனர்.

நேபாள நாட்டில் பருவமழை காலம் தொடங்கியதில் இருந்து அந்நாட்டில் கனமழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக நிலச்சரிவுகளும் ஏற்பட்டு வருகின்றன. கனமழையால் மின்னல் தாக்கமும் ஏற்பட்டு வருகிறது.

கனமழை, வெள்ளம், நிலச்சரிவுகள் மற்றும் மின்னல் தாக்கியதில் மொத்தம் 14 பேர் பலியாகி உள்ளனர் எனத் தகவல் தெரிவிக்கின்றது.

கனமழையால் ஏற்படும் நிலச்சரிவுகளால், பொதுமக்களின் வாழ்க்கை, சொத்துகள், உட்கட்டமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுகின்றன.

இதுபற்றி உள்விவகார துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய பேரிடர் ஆபத்து குறைப்பு மற்றும் மேலாண் கழகம் வெளியிட்டு உள்ள செய்தியில் -

நிலச்சரிவில் சிக்கி 8 பேரும், மின்னல் தாக்கியதில் 5 பேரும் மற்றும் வெள்ளத்தில் சிக்கி ஒருவரும் உயிரிழந்து உள்ளனர். 2 பேரைப் பற்றிய தகவல் தெரிய வரவில்லை. 10 பேர் காயம் அடைந்துள்ளனர். - என்று தெரிவித்து உள்ளது.

கடந்த 17 நாள்களில் (நேற்று ஜூன் 26 வரை) மொத்தம் 28 பேர் உயிரிழந்துள்ளனர். நேபாளத்தில், 18 லட்சம் பேர் பருவகாலத்தின்போது ஏற்படும் மழை தொடர்பான சம்பவங்களால் பாதிக்கப்படக் கூடும் என்று அரசு மதிப்பீடு செய்துள்ளது.



# கிழக்கு மாகாண 7 அமைச்சுகளின் செயலாளராக மூ.கோபாலரத்தினம்!

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் வாகன போக்குவரத்து , கட்டிடங்கள் நிருமாணம், வீடமைப்பு, கிராமிய மின் இணைப்பு, நீர் விநியோகம் ஆகிய ஏழு துறைகளுக்கான அமைச்சின் செயலாளராக கலாநிதி மூ.கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான் இந்த நியமனத்தைத் திங்கட்கிழமை அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆளுநர் மேற்கொண்ட அதிரடி உயர் நிர்வாக மாற்றத்தில் ஓரங்கமாக இவரது நியமனம் இடம்பெற்றுள்ளது.

ஏனைய செயலாளர்களுக்கும் நியமனக் கடிதங்களை ஆளுநர் வழங்கி வைத்தார்.

இலங்கை நிருவாக சேவை விசேட தர அதிகாரியான இவர், ஏலவே கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, திறன் விருத்தி, மகளிர் அபிவிருத்தி, நீர் விநியோக துறை அமைச்சின் செயலாளராக பணியாற்றியுள்ளார்.

அதற்கு முன்னதாக கிழக்கு மாகாண சபையின் பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் பேரவைச் செயலாளராக கடமை புரிந்தவர்.

அதற்குமுன்னர் திறைசேரி முகாமைத்துவ திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியிருந்தார்.

மட்டக்களப்பு செட்டிபாளையத்தைப் பிறப்பிடமாக கொண்ட இவர், மூத்ததம்பி செல்லம்மா தம்பதியினரின் புதல்வராவார். தற்போது கல்முனையில் வாழ்ந்துவருகிறார்.

1995 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக தெரிவு செய்யப்பட்ட இவர், தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரம் வரை செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார். கலைமாணி பட்டத்தைப் பேராதனை பல்கலைக் கழகத்திலும், பொதுநிர்வாக துறையில் முதுமாணிப் பட்டத்தை இந்தியாவிலும் பெற்றார்.

தம்பலகாமம், ஏறாவூர் நகர் ,பட்டிப்பளை, கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும், குச்சவெளி, நாவிதன்வெளி,திருக்கோயில் மற்றும் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும் பணியாற்றியவர்.






## ஆப்கானிஸ்தானைத் திணறடித்து கிண்ணக் கனவுடன்

# இறுதிக்குள் நுழைந்தது தெ.ஆபிரிக்கா

இன்று காலை நடைபெற்ற இருபது-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதலாவது அரையிறுதியில், ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

நடப்பு இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆப்கானிஸ்தான் – தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி இன்று காலை 6 மணிக்கு ஆரம்பித்தது.

இதில், நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியை ஆரம்பம் முதலே தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்கள் திணறடித்தனர்.

இதனால், ஆப்கான் துடுப்பாட்ட வீரர்கள், தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் மளமளவென ஆட்டமிழந்தனர்.

அந்த அணியில் அஸ்மத்துல்லா (10 ஓட்டங்கள்) தவிர வேறெவரும் இரட்டை இலக்கத்தைத் தொடவில்லை.

இறுதியில் அந்த அணி 11.5 ஓவர்கள் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து வெறும் 56 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

சிறப்பாகப் பந்து வீசிய தென்னாபிரிக்காவின் ஷாம்சி மற்றும் ஜேன்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ரபடா மற்றும் நோர்ஜே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

பின்னர் 57 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்கு நோக்கிக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, இரண்டாவது ஓவரில் டி கொக்கை (05) இழந்தது. எனினும் பின்னர் சுதாகரித்து ஆடி 8.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமே இழந்து 60 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்கா சார்பாக ரீசா ஹென்ரிக்ஸ் 29 ஓட்டங்களையும், அணித்தலைவர் மார்க்ரம் 23 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இந்த வெற்றியின் மூலம் நடப்பு இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்கா முதல் அணியாக இறுதிப்போட்டிக்கு முன்னேறி யது.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் ஜேன்சன் தெரிவானார்.

உலகக் கிண்ண வரலாற்றில் தென்னாப்பிரிக்கா இறுதிப்போட்டிக்கு முன்னேறுவது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாவது அரையிறுதியில் வென்ற தென்னாபிரிக்க அணி இறுதியாட்டத்தில், இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இன்று இரவு நடைபெறும் இரண்டாவது அரையிறுதியில் வெற்றிபெறும் அணியுடன் மோதக் காத்திருக்கின்றது.






## நடையைக் கட்டுமா நடப்பு சம்பியன் இங்கிலாந்து?

## 2ஆவது தடவையாக கிண்ணத்தை நுகருமா இந்தியா?

# இரண்டாவது அரையிறுதி இன்று!

இருபது – 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று இரவு 8 மணிக்கு (இலங்கை நேரம்) நடைபெறவுள்ளது.

இதில் முன்னாள் சம்பியன் இந்தியா – நடப்புச் சம்பியன் இங்கிலாந்து அணிகள் களம் காண்கின்றன.

நடப்பு இருபது – 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் இணைந்து நடத்துகின்றன.

இதன் லீக் மற்றும் சூப்பர்–8 சுற்றுகள் முடிந்து அரையிறுதியாட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

சூப்பர் – 8 சுற்றின், குழு – 1 இல் முதல் இரு இடங்களைப் பிடித்த இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகளும் குழு – 2இலிருந்து தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறின.

இதன் முதலாவது அரையிறுதியில் இலங்கை நேரப்படி இன்று காலை 6 மணிக்கு தென்னாபிரிக்கா – பங்களாதேஷ் அணிகள் களம் கண்டன.

இந்நிலையில், இலங்கை நேரப்படி இன்று இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இந்தியா – இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன. இந்த ஆட்டம் கயானா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்திய அணி லீக் சுற்றில் 3 வெற்றிகள் மற்றும் முடிவற்ற ஓர் ஆட்டம் என 7 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்தது. சூப்பர் 8 சுற்றில் ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷ் அணிகளை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்துத் துறைகளிலும் மிளர்கின்றது.

இதேபோல், மறுமுனையில் களமிறங்கவுள்ள நடப்புச் சம்பியன் இங்கிலாந்து அணி, லீக் சுற்றில் 2 வெற்றிகள் மற்றும் முடிவற்ற ஒரு போட்டி என 5 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தையும், சூப்பர் – 8 சுற்றில் மேற்கிந்தியத் தீவுகள், அமெரிக்கா ஆகிய அணிகளை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

இருபது–20 உலகக் கிண்ண வெற்றியாளர்கள் என்ற ரீதியில் இந்திய அணி, 2007ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது உலகக் கிண்ண ஆட்டத்தில் சம்பியன் கிண்ணத்தைத் தட்டித்தூக்கியது. ஆனால், அதன் பின்னர் அந்த அணியால் கிண்ணத்தை வெல்ல முடியவில்லை.

இங்கிலாந்து அணியோ, முதல்முறையாக 2010ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்றது. அதன் பின்னர் கடந்த உலகக் கிண்ணத்தையும் தம் வசப்படுத்தி நடப்பு சம்பினாகத் திகழ்கின்றது.

எனவே, இம்முறை எப்படியாவது நீண்டவெளியின் பின்னர் கிண்ணத்தை வெல்வதற்காக இந்திய அணி முனையும். அதன் பயனாக இலங்கிலாந்துக்கு இன்றைய அரையிறுதியில் கடும் நெருக்கடியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, இங்கிலாந்து அணியும் எப்படியாவது இறுதிப் போட்டிக்கு முன்னேற வேண்டும் என்ற முனைப்புடன் எதிர்த்தாக்குதலைத் தொடுத்து, மூன்றாவது முறையாகக் கிண்ணத்தைச் சுவீகரிக்க முனையும்.

மொத்தத்தில் இன்றைய இரண்டாவது அரையிறுதியாட்டம் ரசிகர்களுக்குப் பெரு விருந்தாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

பக்கங்கள் - 6

# கனடா முரசு

வியாழக்கிழமை | 27/06/2024

## ஷில்கொட் பழங்குடியின மக்களுடைய அங்கீகார நினைவு நிகழ்வில் பிரதமர்!

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஜுன் 27**

பிரதமர் மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ, கனேடிய வரலாற்றில் முதன் முதலில் பழங்குடியினரின் பட்டத்தை அறிவித்த ஒரு முக்கிய நீதிமன்ற தீர்ப்பிற்கு பத்து ஆண்டுகால C2▶

# ஜூலை 1 முதல் வாகன உரிமத் தகடுகள் இயல்பான புதுப்பித்தல் நடைமுறைக்கு

**ஒன்ராரியோ, ஜுன் 27**


கனடிய தினமான ஜுலை முதலாம் திகதி தொடக்கம் வாகன உரிமத் தகடுகளின் இயல்பான புதுப்பித்தல் நடைமுறைக்கு வருகின்றது.

நல்ல நிலையில் உள்ள ஒன்ராறியோ சாரதிகள் கனடா தினத்திலிருந்து தங்கள் உரிமத் தகடுகளைப் புதுப்பிப்பதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.




முன்னதாகவே கெட் இட் டன் சட்டம் என அழைக்கப்படும் ஒம்னிபஸ் மசோதாவின் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, சாரதிகள் தங்கள் தட்டுகளை இணையத்தில் அல்லது நேரில் சர்வீஸ்ஒன்டாரியோ இடத்தில் கைமுறையாக புதுப்பிப்பதற்கான தேவையை நீக்குகிறது.

முன்பு உரிமத் தகடு ஸ்டிக்கர்களையும் 2022 இல் புதுப்பித்தல் தொடர்பான செலவுகளையும் நடப்பு மாகாண அரசாங்கம் நீக்கியமை குறிப்பிடத்தக்கது. C2▶




# பிரிட்டிஷ் கொலம்பியாவின் முன்னாள் முதல்வர் ஜோன் ஹோர்கன் புற்றுநோயால் மீளப் பாதிப்பு

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜுன் 27

பிரிட்டிஷ் கொலம்பியாவின் முன்னாள் முதல்வர் ஜோன் ஹோர்கன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தாம் மூன்றாவது முறையாக புற்று நோய் பாதிப்புக்கு ஆளாகியுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தற்போது ஜேர்மனிக்கான கனடியத் தூதவராகக் கடமையாற்றி வருகின்றார்.

2017ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கொலம்பியாவில் புதிய ஜனநாயகக் கட்சியை 16 ஆண்டுகளில் முதல் முறையாக ஆட்சியமைப்பதற்கு ஜோன் ஹோர்கன் வழி அமைத்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் அந்தஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்ற மாகாணத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்று பெரும்பான்மை அரசினை அமைப்பதற்கு வழியமைத்தவர்.

ஐந்து தடவைகள் மாகாணத் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோன் ஹோர்கன் 2017 முதல் 2022 வரை முதல்வராக இருந்தவர்.

# 7 மாத சிசு இருந்த காரை திருடியவர் காருடன் சிசுவைக் கைவிட்டு ஓட்டம்

## மொன்ட்றியல் ரெக்ஸ்ப்ரோ பகுதியில் சம்பவம்

கனடாவில் மொன்ட்றியலில் ரெக்ஸ்ப்ரோ பகுதியில் 7 மாத குழந்தை ஒன்றுடன் கார் ஒன்று களவாடப்பட்டது. பின்னர் பொலிஸார்குழந்தையுடன்காரை மீட்டனர்.

காரின் பின் இருக்கை பகுதியில் இந்த 7 மாத குழந்தை இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளை நிற மெஸ்டா ரக கார் ஒன்றே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது. வாகனத்திற்குள் ஏழு மாத சிசு ஒன்று இருப்பது தெரியாமலேயே சம்பந்தப்பட்ட நபர் வாகனத்தைக்களவாடிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். C2▶



# அறிவியல் மையம் திடீரென மூடப்பட்ட சர்ச்சை முதல்வர் டக் ஃபோர்டு பதிலளிக்காமல் நழுவல்




**ஒன்ராரியோ, ஜுன் 27**

மிசிசாகாவில் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட ஒன்ராரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்டு, கடந்த வாரம் ஒன்ராறியோ அறிவியல் மையம் திடீரென மூடப்பட்டமை குறித்த செய்தியாளர்களின் கேள்விகளைத் தட்டிக் கழித்துள்ளார்.

தொழிலாளர் பாராட்டு தினத்திற்காக ஃபோர்டு விமான நிலையத்திற்குச் சென்றார், ஆனால் அறிவியல் மையம் மூடப்பட்டமை பற்றிய செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் முன் அவர் வெளியேறினார்.

1969 இல் மறைந்த ரேமண்ட் மோரியாமாவால் வடிவமைக்கப்பட்ட கட்டடம், வெள்ளிக்கிழமை சில மணிநேர அறிவிப்புடன் மூடப்பட்டது.

உள்கட்டமைப்பு ஒன்டாரியோவின் வேண்டுகோளின் பேரில் எழுதப்பட்ட பொறியியல் அறிக்கையை மேற்கோள் காட்டிஃ கூரையில் உள்ள கட்டமைப்பு சிக்கல்கள் காரணமாக, அதை ஆக்கிரமிப்பது பாதுகாப்பற்றது எனக் கூறி உடனடியாக மூடுவது அவசியம் என்று ஒன்ராரியோ மாகாணம் அறிவித்திருந்தது.

**ஷில்கொட்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

நிறைவினை நினைவுகூர்ந்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் உள்நாட்டில் உள்ள ஷில்கொட்-இன் பழங்குடியினரின் 10 வது ஆண்டு நினைவு நாளினை நாட்டிற்கான 'முக்கியமான தருணம்' என பிரதமர் அடையாளப் படுத்தியுள்ளார்.

கனடாவின் உச்ச நீதிமன்றத்தின் 2014 ஷில்கொட்-இன் தீர்ப்பு, அவர்களின் பாரம்பரிய எல்லைக்குள் அவர்களை உரிமையாளராக அங்கீகரித்தது.

ட்ஷரூடோவுடன் மாகாண அதிகாரிகள், மத்திய உள்நாட்டு அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி மற்றும் உள்நாட்டுத் தலைவர்கள், பிரிட்டிஷ் கொலம்பியாவின் தொலைதூர நெமையா பள்ளத்தாக்கில் உள்ள பழங்குடியின உறுப்பினர்களுடன் சேர்ந்து நிகழ்வைக் கொண்டாடினர்.

'இந்த ஆண்டுவிழா அனைத்து பழங்குடி மக்களுடனும் நல்லிணக்கம் மற்றும் கூட்டாண்மைக்கான எங்கள் தற்போதைய உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது' என்று ட்ஷரூடோ ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியா கனேடிய வரலாற்றை மாற்றிய தீர்ப்பின் ஆண்டு நிறைவில் சில்கோட்டின் பிரதேசத்தில் இருப்பது ஒரு சக்திவாய்ந்த மற்றும் நகரும் அனுபவமாக இருப்பதாக உள்நாட்டு உறவுகளின் அமைச்சர் மர்ரே ராங்கின் கூறியுள்ளார்.



**ஜுலை 1 முதல்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அதற்கு முன், ஓட்டுநர்கள் தங்களுக்குச் சொந்தமான ஒவ்வொரு வாகனத்திற்கும் இலக்கத் தகடுகளைப் புதுப்பிப்பதற்கு 120 டொலர்கள் செலுத்தினர்.

கட்டணம் நீக்கப்பட்ட போதிலும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் போக்குவரத்து அமைச்சானது மாகாணத்தில் 1,015,139 காலாவதியான இலக்கத் தகடுகள் இருப்பதாகவும், இது ஒரு தானியங்கி அமைப்பின் தேவையை எடுத்துக் காட்டுவதாகவும் தெரிவித்திருந்தது.

**7 மாத சிசு...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இந்த வாகன திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் தேடுதல் மேற்கொண்ட பொலிஸார் களவாடப்பட்ட வாகனத்தைக் கண்டுபிடித்தனர்.

இந்த களவாடப்பட்ட வாகனம் சிறு விபத்துக்கு உள்ளாகி இருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

விபத்தை மேற்கொண்ட சந்தேக நபர் காரை விட்டு இறங்கித் தப்பித்துச் சென்றுள்ளார்.

ஏழு மாத சிசு பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டு குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாகனத்தை களவாடிய நபர் இது வரையில் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிசுவைத் தனித்துக் காரில் விட்டுச் சென்ற தாய்க்கு எதிராகக் குற்றச்சாட்டு சுமத்தப்படுமா என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.



# கனடாவில் போர்ட் வாகனங்களின் பாவனையாளர்களுக்கு எச்சரிக்கை

கனடாவில் போர்ட் (Ford) ரக வாகனங்களை பயன்படுத்துவோருக்கு விசேட அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

உலகின் முதல் நிலை வாகன உற்பத்தியை நிறுவனங்களில் ஒன்றான / போர்ட் நிறுவனத்தின் பிக்கப் ரக வாகன ரகம் ஒன்றில் கோளாறு காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த வாகனங்கள் மீளப் பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆறாரை லட்சம் வாகனங்கள் இவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சுமார் ஒரு லட்சம் வாகனங்கள் கனடியர்களினால் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகனங்கள் இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் பழுது பார்க்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகனங்களின் ஃபர்ஸ்ட் கியர் திடீரென மாறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேகமாக செல்லும் சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு மாற்றமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

போர்ட் நிறுவனத்தின் F-150 pick-ups மொடல் வாகனங்களே இவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்பட உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வாகனங்கள்வேகமாக பயணித்துக் கொண்டிருக்கும்போது கியர்கள் தனாக மாற்றப்படுவது ஆபத்தனது எனவும் விபத்துக்கள் ஏற்பட வழிவகுக்கும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறானவாகனங்களை பழுது பார்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்த ரக வாகனங்களை மீள பெற்றுக் கொள்வதாக போர்ட் நிறுவனம் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ளது.



# மத்திய அரசின் பல் மருத்துவத் திட்டத்திலிருந்து விலகுவதற்கு அல்பேர்ட்டா மாகாணம் தீர்மானம்

**அல்பேர்ட்டா, ஜூன் 27**

கனடிய மத்திய அரசாங்கத்தின் பல் மருத்துவ திட்டத்திலிருந்து விலகுவதாக அல்பேர்ட்டா மாகாணம் தெரிவித்துள்ளது.

இந்த தகவலை மத்திய அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளதாக அல்பேர்ட்டா முதல்வர் அறிவித்துள்ளார்.

கனடிய பல் பராமரிப்பு திட்டம் மாகாண அதிகார வரம்பை மீறியதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கான தமது கடிதத்தில் முதல்வர் டேனியல் ஸ்மித் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசாங்கத்தால் ஒரு புதிய சுகாதாரத் திட்டம் உருவாக்கப்பட வேண்டுமானால், அது மாகாணங்கள், பிரதேசங்களின் முழு ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படல் வேண்டும் என அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



சுகாதாரத் திட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னரே கலந்தாய்வு நடந்திருக்க வேண்டும் எனத் தெரிவித்த முதல்வர் ஸ்மித், துரதிர்ஷ்டவசமாக, அது நடைபெறவில்லை என தெரிவித்துள்ளார்.

மத்திய பல் மருத்துவ நிதியில் மாகாணத்தின் பங்குக்கான ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அல்பேர்ட்டா முயல்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அல்பேர்ட்டாவில் வசிக்கும் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு பல் மருத்துவத்தை விரிவுபடுத்துவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்த மாகாண அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.




# ஹமாஸுடன் தொடர்புடைய உதவிக் குழுவின் முன்னாள் பெண் ஊழியரை நாடு கடத்த முடிவு

**ஒன்ராரியோ, ஜூன் 27**

ஹமாஸ் அமைப்புடன் தொடர்புடைய உதவிக் குழுவின் முன்னாள் ஊழியரை நாடு கடத்துவதற்கு கனடிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

கனடிய குடிவரவு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஒன்ராரியோ மாகாணத்தின் மிசிசாகா பகுதியைத் தளமாகக் கொண்ட – ஹமாஸுடன் தொடர்புடைய நிவாரணக் குழுவில் பணிபுரிந்த – பலஸ்தீனியப் பெண்ணை நாடு கடத்துவதற்கே உத்தரவிடப்பட்டுள்ளது.




பாதுகாப்பு காரணங்களுக்காக மஜெடா சராஸ்ரா கனடாவிற்கு அனுமதிக்கப்பட முடியாதவராக கருதப்பட்டார்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கருதப்படும் இர்பான்–கனடா அமைப்பின் உறுப்பினர் என்ற காரணத்தால் குடிவரவு மேல்முறையீட்டு பிரிவு, 45 வயதான அவருக்கு எதிராக தீர்ப்பளித்துள்ளது.

ஜனவரி 12ஆம் திகதி வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவர் மத்திய மேல்முறையீட்டு நீதிமன்றில் முறையீடு செய்துள்ளார்.


கனடிய அதிகாரிகள் இர்பான–கனடாவின் தொண்டு அந்தஸ்தை 2011இல் தடை செய்ததுடன், 2014இல், கனடிய அரசாங்கம் அதனை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்தமை குறிப்பிடத்தக்கது.



# கியூபெக் கடைகள், வர்த்தக அடையாளங்களில் பிரெஞ்சு மொழிக்கு முதன்மை இடம் கட்டாயம்

## புதிய விதிகளை வெளியிட்டது மாகாண அரசாங்கம்








**கியூபெக், ஜூன் 27**

மாகாணத்தில் பிரெஞ்சு மொழியைப் பாதுகாப்பதற்கான ஒரு பெரிய முயற்சியின் ஒரு பகுதியாக, கடைகள் மற்றும் வெளிப்புற வர்த்தக அடையாளங்களில் பெரும்பாலான இடத்தை பிரெஞ்சு மொழி ஆக்கிரமிக்க வேண்டும் என்று கியூபெக் அரசாங்கம் புதிய விதிகளை வெளியிட்டுள்ளது.


புதன்கிழமை வெளியிடப்பட்ட இந்த புதிய விதிமுறைகள், வணிகப் பெயர் ஆங்கிலத்தில் இருந்தாலும், பொது அடையாளங்கள் மற்றும் வணிக விளம்பரங்களில் பிரெஞ்சு "குறிப்பிடத்தக்க வகையில் முதன்மையாக" இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

நடைமுறையில், அதாவது கனடியன் டயர், பெஸ்ட் பை மற்றும் செகண்ட் கப் போன்ற கடைகள், ஆங்கில பிராண்ட் பெயரை விட இரண்டு மடங்கு இடத்தைப் பிடிக்கும் பொதுவான சொற்கள் அல்லது விளக்கங்களை அவற்றின் கடை முகப்புகளில் பிரஞ்சு மொழியில் சேர்க்க வேண்டும்.

"கியூபெக்கில், கியூபெக்கர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தெருக்களில் உலா வரும்போது, அது தெளிவாக இருக்க வேண்டும். கியூபெக் ஒரு பிரெஞ்சு மொழி பேசும் நாடு" என்று கியூபெக்கின் பிரெஞ்சு மொழி அமைச்சர் ஜீன்-பிரான்கோயிஸ் ராபர்ஜ் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"பிரஞ்சு மொழியில் தகவல் மற்றும் சேவை வழங்குவதற்கான நுகர்வோரின் உரிமையை நிறுவனங்கள் மதிக்கின்றன என்பதையும் நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் 1, 2025 முதல் நடைமுறைக்கு வரும் புதிய விதிகள், 2022 இல் நிறைவேற்றப்பட்ட கியூபெக்கின் மொழிச் சட்டங்களை மாற்றியமைக்கும் மசோதா 96இன் சில பகுதிகளை இயற்றும்.




# குடியிருப்புப் பள்ளிகளை நிர்வகிப்பதில் தேவாலயம் தவறிழைத்ததுள்ளதுதான்!

## கத்தோலிக்க மறைமாவட்டத் தலைவர் ஒப்புதல்

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 27**

பிரிட்டிஷ் கொலம்பியாவில் குடியிருப்புப் பள்ளிகளை நிர்வகித்தமை தொடர்பில் தேவாலயம் தவறிழைத்ததாக வான்கூவரின் றோமன் கத்தோலிக்க உயர் மறைமாவட்டத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரு பழங்குடியினர் குழுவொன்றுடன் புதிதாக வெளியிடப்பட்ட உடன்படிக்கை தீர்வுக்கான சாலை வரைபடமாக செயல்படும் என்று தாம் நம்புகிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசாங்கம் மற்றும் கெம்லப்ஸ், கம்லூப்ஸ் பழங்குடியினர் குழுக்களுக்கு இடையேயான உடன்படிக்கை, கனடா முழுவதும் உள்ள பழங்குடியினர் மற்றும் கிறிஸ்தவ சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை வழிநடத்துவதில் ‘மேலும் உரையாடல் மற்றும் பொறுப்புணர்வின் கருவியாக’ இருக்கும் என பேராயர் மைக்கல் மில்லர் தெரிவித்துள்ளார்.

‘இது நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கி நகரும் ஓர் உயிருள்ள, ஆற்றல்மிக்க அறிக்கை. இந்த அர்ப்பணிப்புகளையும், ஆவணத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பகிரப்பட்ட உண்மைகளையும் ஏற்றுக் கொள்வதன் மூலம், எங்களுக்கு உறுதியான அடித்தளம் உள்ளது’ என அவர் கூறியுள்ளார்.